TCAV TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA

விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம், ஆஸ்திரேலியா

# Messenger தூதுவன்

கிறிஸ்துமஸ் வெளியீடு | December 2015




TCAV TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA

விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம், ஆஸ்திரேலியா

Messenger தூதுவன்

கிறிஸ்துமஸ் வெளியீடு | December 2015



*With Best Compliments from*

# PERPETUA MONEY TRANSFER

**WorldWide**

## We Guarantee the best rate for

## SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE



- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

## Send Money to any Bank in Sri Lanka

**Direct Deposit**

Perpetua Money Transfer
BSB No: 033186
Acc No: 401283
Westpac Bank Australia

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478
Email: pmoneytransfer@ymail.com



ஆன்மீக குருவின் ஆசியுரை...

# நீயே என் சுகமான குடில்

ஆண்டவரின் பிறப்பு விழாவை கொண்டாடும் இறைமக்களே !

நம் பாலன் இயேசு நம்மைப் பார்த்து அழைக்கும் விடுப்பு "நீயே என் சுகமான குடில்" "பிள்ளைகளே, உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்" (கலா 4:19) "நீயே என் சுகமான குடில் என்று குழந்தை இயேசு தனது பிறப்பின் ஆசீர்வாதமாக நமக்கு இன்று வழங்கவிருக்கின்றார். ஆனால் யார் இந்த சுகமான குடில்?"

சுகம் இழந்தவர்களையும், சுமைகளால் வீழ்ந்தவர்களையும் அரவணைத்து அன்பு செய்கின்ற இதயங்களைத்தான், கரங்களைத்தான் "என் சுகமான குடில்" என்று குறிப்பிட்டு சொல்கிறார் பாலன் இயேசு.

மனிதாபிமானத்தையே தனது இரத்தமாக அதன் வளர்ச்சியையே தனது மூச்சாகக் கொண்டு அல்லும் பகலும் மனிதத்திற்காக போராடுபவர்களைத் தான் "என் சுகமான குடில்" என்று உறுதிப்படுத்துகின்றார் பாலன் இயேசு.

எனவே நாம் மனிதர்களை அன்பு செய்வோம். பெற்ற வாழ்வைப் பகிர்ந்துக் கொள்வோம். சக மனிதனோடு ஒன்றிணைந்த வாழ்வை மேற்கொள்வோம். இதன்மூலம் "இந்த மனக்குடிலில் தான் நான் பிறக்க விரும்புகிறேன்" என்று ஆசீர் பொழியும் ஆண்டவரின் அருளை கிறிஸ்து பிறப்பு விழாவில் நாடுவோம். இறைமக்கள் அனைவருக்கும் எனது கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துக்கள் !

அன்புடன்,<br>
உங்கள் ஆன்மகுரு<br>
அந்தோணி ஞானப்பிரகாசம்

# Advent

Luke 2:7

While they were there, the days were completed for her to give birth. And she gave birth to her firstborn son; and she wrapped Him in cloths, and laid Him in a manger, because there was no room for them in the inn.

## What is Advent?

Advent is a season in the Church year that lasts about four weeks. It begins four Sundays before Christmas and it ends on Christmas Eve.
Its a season of preparation for the coming of Jesus.

## Why Do we Celebrate Advent?

This may seem like a pretty straight forward answer. Because we're preparing for the birth of Jesus. Well there is a lot more to celebrating advent. One of the other main reasons are we are not only preparing for the coming of Jesus but to renew ourselves, forgive others and to show love during this time in the church year.

## What does Advent mean to me?

Advent, to me just means to prepare not only for the birth of our Saviour, Jesus but to reflect on ourselves. It's a time of pure love and forgiveness. We are after all preparing for the birth of a person who has all the qualities we practice during this time.



*Jerina Fernando*
*Year 7*



# அர்த்தமுள்ள "நத்தார்"

ஆண்டாண்டு காலமாக பாவச்சேற்றில் அமிழ்ந்துக் கொண்டிருந்த, தன்னால் உருவாக்கப்பட்ட மனிதகுலத்தை பாவச்சேற்றிலிருந்து மீட்பதற்காக இறைவன் தன் ஒரே மகன் இயேசுவை, பலிக்கடாவாக இந்த உலகில் பிறக்க வைத்த நாளை நாம், நத்தார் விழாவாக கொண்டாடி வருகின்றோம். கடவுள் எம்மீது வைத்த "அன்பு" இயேசு பிறப்பு! எனவே, அன்புதான் நத்தாரின் மூல காரணமாகிறது. இயேசுவும், தன் வாழ்நாளில் அன்பையே, ஆயுதமாக பாவித்து வந்ததை நாம் காண்கிறோம். "உன்னை நீ அன்பு செய்வது போல், உன் அயலானையும் அன்பு செய்" இது இயேசு தன் சீடர்களுக்கு இட்ட கட்டளை. அன்பு இருந்தால் வேறு தீய எண்ணங்களும், செயல்களும் எம்மை அணுக முடியாது. இயேசு பிறந்த வேளையில், ஏழை இடையர்கள், குழந்தை இயேசுவைக் கண்டதும் மகிழ்ச்சியில் ஆடிப்பாடினார்கள். இன்று நாமும் நத்தாரை கொண்டாடுகிறோம். ஆனால் எப்படி கொண்டாடுகிறோம்? ஒவ்வொரு வருடமும் உலகிலே நத்தார் காலங்களில் எத்தனை கோடிகள் செலவிடப்படுகின்றன? புத்தாடைகள், புதுவகை உணவுகள், ஏராளமான பரிசுப் பொருட்கள், பற்பல விழாக்கள், குடி கும்மாளம் ! இவற்றையா நத்தாரின் நாயகன் இயேசு எதிர்ப்பார்க்கின்றான்?

இல்லை ! இயேசு, தான் வாழ்ந்த நாட்களை ஏழை எளியவர்களுடன் செலவளித்ததை நாம் காண்கிறோம். பாவிகளுடன் பந்தியமர்ந்தார். நோயாளிகளை தொட்டுக் குணமாக்கினார். அவர் ஒருபோதும் செல்வந்தரை நாடிச் செல்லவுமில்லை, சுகபோகங்களை எதிர்பார்க்கவுமில்லை. எப்போதும் ஏழைகளுடனும், தம் சீடர்களுடனும் பகிர்ந்துண்டு வாழ்ந்தவர் இயேசு !

மூன்று அரசர்கள் மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருந்த இயேசுவை தேடிவந்து பரிசளித்த செய்தியை நாம் அறிவோம். பணக்காரனுக்கு பணக்காரனும், உறவினருக்கு உறவினரும், நண்பனுக்கு நண்பனும் பரிசளிப்பதும், அன்பு செய்வதும் வெளிப்பார்வையில் சிறப்பாய் தெரிந்தாலும், உண்மையிலே ஒருவன் தன் தரத்துக்கும் கீழுள்ள ஒரு ஏழைக்கோ, அனாதைக்கோ, அகதிக்கோ, நோயாளிக்கோ அல்லது சிறையில் வாடும் ஒருவனுக்கோ, உதவுவதும் பரிசளிப்பதும், உணவு, உடை வழங்குவதும், ஆறுதல் கூறி அரவணைப்பதும் தான் ஒரு அர்த்தமுள்ள "நத்தார்" நிகழ்வாக அமைய முடியும். இதுதான், இயேசு விரும்பும் நத்தாராக இருக்கமுடியும். எம் மீட்பரின் பிறப்பை நாம் கொண்டாடத்தான் வேண்டும் ! நல்லது ! கொண்டாடுவோம் ! மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டாடுவோம் ! இன, மத, சாதி, தர வேறுபாடு பார்க்காமல் ஒருவர் ஒருவரை அன்பு செய்வோம். பகிர்ந்துண்போம். நோய், துன்பம், ஏக்கம், இழப்பு முதலியவற்றினால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களை தேடிச் சென்று அவர்களைத் தேற்றி, ஆறுதல் கூறி, தேவையான உதவிகளை வழங்குவோம். அப்போதுதான், ஒரு அர்த்தமுள்ள நத்தார் !

நத்தாரின் மகிழ்ச்சி எமக்குமட்டும் அல்லாமல் எம்மை சூழ்ந்துள்ள அனைவருக்கும், உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்கவேண்டும். எனவே நம் மனங்களில், உள்ள சாதி, மத, இன, வேறுபாடுகள் என்ற இருளை அன்பு என்ற ஒளிகொண்டு அகற்றி இவ்வாண்டு நத்தாரை அர்த்தமுள்ள நத்தாராக, அனுஷ்டிப்போம் !

- அன்புடன்,

சூசைராஜ் செபஸ்தியம்பிள்ளை

# என் கண்கள் கண்டுகொண்டன !

சில மாதங்களுக்கு முன்னால் என் தம்பி மகள் Fina படிக்கும் பள்ளியில் கலை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. Fina தன் வகுப்பு குழு நடனத்தில் பங்கு பெற்றிருந்தாள். தம்பிக் குடும்பத்தோடு சேர்ந்து நிகழ்ச்சிக்கு நானும் சென்றிருந்தேன். சரியாக மாலை 6.00 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பித்தது. குழந்தைகள் வகுப்பு வாரியாக வந்து தங்களது திறமைகளை நடனங்களாகவும், நாடகங்களாகவும் மேடைப் படுத்திச் சென்றனர். எல்லா நிகழ்ச்சிகளையும், எல்லா குழந்தைகளையும் ரசித்து பார்த்தாலும், மனம் மட்டும் Finaவின் நிகழ்ச்சி எப்பொழுது வரும் என்று ஆவலோடுக் காத்துக் கொண்டே இருந்தது. அடுத்த நிகழ்ச்சியாக இருக்குமோ? அடுத்ததாக இருக்குமோ? என்று அறிவிப்பிற்கு காதுகள் கவனித்துக் கொண்டே இருந்தது.

அடுத்தது Fina வகுப்பு நிகழ்ச்சி என்று சொன்னவுடன், மனம் பரபரக்க, தானாகவே உடல் இருக்கையின் விளிம்பிற்கு நகர, கண்கள் மேடையையே நோக்கத் தொடங்கின. மேடையில் வெளிச்சம் குறைவாகத்தான் இருந்தது. 25க்கும் மேற்பட்ட ஒரே வயதுக் குழந்தைகள். ஒரே வகையான ஆடை, அலங்காரம். எங்கள் இருக்கையின் வரிசையும் மேடையிலிருந்து சற்றுத் தொலைவில் தான் இருந்தது. குழந்தைகளை அடையாளம் காண்பது சற்று சிரமமாகத் தான் இருந்தது.

குழந்தைகள் மேடைக்கு வந்து நின்ற அந்த நொடிப் பொழுதிலேயே என் தம்பி மனைவி, Finaவின் அம்மா "அதோ Fina... அதோ Fina..." என்று கண்டுபிடித்து விட்டாள். அவள் காட்டிய திசையில் நோக்கிய எனக்கு Finaவைக் கண்டுபிடிக்க சில வினாடிகள் ஆகியது. பேசிக் கொண்டிருந்த சில மணித் துளிகளில் நண்பராகிப் போன பக்கத்தில் அமர்ந்திருந்தவரிடம் எத்தனை முறை காட்டியும் அவரால் Finaவைக் கண்டுபிடிக்க முடியவே இல்லை.



கிறிஸ்துமஸ் என்றதும் நம் மனத்திரையில் விரிவது குடில் காட்சி. மாட்டுத் தொழுவத்தில் அன்னை மரியாளும், சூசையப்பரும், அமர்ந்திருக்க புல்லணையில் குழந்தை இயேசு கைகளை விரித்துப் படுத்திருக்க, ஞானிகளும், வானத் தூதர்களும், இடையர்களும் சூழ்ந்திருக்கும் காட்சி நம் கண்களுக்கு முன்னால் விரிகிறது.

ஞானிகளுக்கு நட்சததிரம் வழிகாட்ட அவர்கள் சென்று குழந்தை இயேசுவைக் கண்டனர். வானத்தூதர் இடையர்களுக்கு அறிவிக்க அவர்கள் சென்று குழந்தையைக் கண்டார்கள்.

மோசேயின் சட்டப்படி தூய்மை சடங்கை நிறைவேற்றிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க மரியாவும், சூசையும் குழந்தையை எருசலேம் தேவாலயத்திற்கு கொண்டு சென்றார்கள். இஸ்ரயேலுக்கு வாக்களிக்கபட்ட ஆறுதலை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த சிமியோன் என்பவர், தூய ஆவியின் தூண்டுதலால் கோவிலுக்கு வந்திருந்தார். திருச்சட்ட வழக்கத்திற்கு ஏற்பச் செய்ய வேண்டியதை குழந்தை இயேசுவுக்கு செய்து முடிக்கப் பெற்றோர் குழந்தையை உள்ளே கொண்டு



வந்தபோது, சிமியோன் குழந்தையை கையில் ஏற்றயவாறு சொல்வார் : "மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுக் கொண்டன. அவ்வாறே, கோவிலை விட்டு நீங்காமல் அல்லும் பகலும் நோன்பிருந்து செபித்து வந்த அன்னா என்பவரும் அந்த நேரத்தில் கோவிலுக்கு வந்துக் குழந்தையை கண்டு மகிழ்ந்து எல்லோரிடமும் குழந்தையைப் பற்றி பேசினார்."

மனிதனாகப் பிறந்த எல்லோர் மனதிலும் எழும் ஒரு கேள்வி "இறைவனைக் காண முடியுமா?" நான் யோசித்துப் பார்க்கிறேன். எருசலேம் தேவலாயத்திற்கு ஒவ்வொரு நாளும் இதுப் போன்ற சடங்குகளுக்கு ஆயிரக் கணக்கில் குழந்தைகளை கொண்டு வருகையில், சிமியோனும், அன்னாவும் இயேசுவைக் கண்டுக் கொண்டது எப்படி சாத்யமானது?

இறைவனைக் காண வேண்டும் என்று அவர்களுக்குள்ளாக இருந்த பேரார்வம், தணியாத தாகம், நோன்போடு சேர்ந்த இடைவிடாத செபம், காண்போம் என்ற உறுதியான விசுவாசம் தான் அவர்களுக்கு இயேசுவை அடையாளம் காட்டியது.

ஞானிகளுக்கு நட்சத்திரம் வழிக் காட்டியதுப் போல், நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஏதாவது ஒருக் கட்டத்தில் நமது விழிகளைத் திறக்க வைத்து, இறைவனிடம் நம்மைக் கொண்டுச் சேர்க்கும் ஒரு நட்சத்திரம் தோன்றத் தான் செய்கிறது. அந்த நட்சத்திரம் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஏதாகிலும் துயரமாக இருக்கலாம், நம் நெருங்கிய உறவின் பிரிவாக இருக்கலாம், ஏமாற்றமாக இருக்காலம், ஈடு செய்ய இயலாத இழப்பாக இருக்கலாம். ஆனால், விசுவாசத்தில், இறையன்பில் பயணிக்கும் ஒருவருக்கு இந்த நட்சத்திரங்கள் இறைவனை நோக்கி இன்னும் வேகமாக செல்வதற்கான வழிக் காட்டியாக இருப்பதைக் கண்டு வியந்து மகிழ்கின்றேன். சில வருடங்களுக்கு முன்னால் எனது வாழ்க்கையிலும் ஒரு நட்சத்திரம் தோன்றியது. எனது தாயின் இறுதி நாட்களில், அவரோடு இணைந்து நான் கடந்து சென்ற நாற்பது நாள் தவப்பயணம்தான் எனக்குள் தோன்றிய நட்சத்திரம். 3 வருடங்களுக்கு முன்னால் உதித்த இந்த நட்சத்திரத்தின் பிரகாசம் குறையாமல் இன்றும் அப்படியே இருக்கிறதா? என்றால், இல்லை என்பது தான் உண்மை. ஏரோது மன்னன் தலையிட்ட போது, ஞானிகளுக்கு நட்சத்திரம் தன்னை மறைத்துக் கொண்டது போல, இவ்வுலக வாழ்க்கையின் ஆசா பாசங்களும், தேவையற்ற பயங்களும், குற்ற உணர்வும், ஊன் இயல்பின் பலவீனங்களும் மேலோங்கும் போது, நமது நட்சத்திரம் மேகங்களுக்குள் சென்று மறைந்து விடுகிறது.

ஆனால் மேகங்கள் எப்பொழுதும் நிரந்தரம் அல்ல. நம் முழு உள்ளத்தோடும் , முழு ஆன்மாவோடும் இறைவனை அன்பு செய்யும் போது விசுவாசத்தின் ஆற்றலால் மேகங்கள் விலகி மீண்டும் நட்சத்திரம் வெளிப்பட இறைவனை நோக்கிய நம் பயணம் தொடர்கிறது.

மங்கிய ஒளியிலும் மேடையில் பலக் குழந்தைகள் நடுவில் ஒரு தாயால் தன் மகளை கண் இமைக்கும் நேரத்தில் அடையாளம் காண உதவியது தாய்-மகள் இரத்த உறவு.

அத்தைக்கு சில நிமிடங்களும், கைக் காட்டியும் தேவைப்பட்டது. பக்கத்தில் இருந்த நபருக்கு அந்தக் குழந்தை யார் என்பதே தெரியாது. அதனால் அவரால் அடையாளம் காண இயலாமல் போனது.

திருமுழுக்கின் வழியாக இறைவனோடு நமக்கு ஏற்பட்ட தந்தை-மக்கள் உறவை தனது இரத்தத்தினால் பலப்படுத்தியவர் மகனாம் இயேசு. ஆதரவாளராய் நம்முள் இருக்கும் தூய ஆவியாரால் நாம் ஞானம் பெற்று உள்ளத்தின் நிறைவால் நம் உதடுகள் "இறைவா உம்மை எம் கண்கள் கண்டுக் கொண்டன." என்று சொல்லும் நாட்கள் ஒவ்வொன்றும் நமக்கு கிறிஸ்துமஸ் தான்.

– அன்புடன்,
**நிர்மலா அல்போன்சு**



# ஜெபம் . . .

நன்றி : GOD CALLING
தொகுத்தவர் : A.J.S. ராஜன், சென்னை



நீ ஜெபம் செய்ய வேண்டும். வழி பிறக்கும். கர்த்தர் கவலையோடு விசாரிக்கிறார். அவருடைய திட்டங்கள் வெளியாகும். அன்போடு காத்திரு.அன்பே திறவு கோல். அதனால் திறக்கப்படாத எந்த பூட்டும், கதவும் கிடையா.

விசுவாசத்திற்காக தினமும் ஜெபி. அது இறைவனின் வெகுமதி. மகத்தான செயல்களை நிறைவேற்ற மக்களுக்கு தேவைப்படும் காரணம் (கருவி) அதுதான். நிச்சயமாக நீ ஜெபம் செய்ய வேண்டும். நம் ஜெபங்களுக்குரிய பலன் நம் விசுவாசத்தை பொறுத்தே இருக்கிறது.

ஜெபிக்க நேரம் எடுத்துக்கொள். இறைவனோடு தனியே தனித்து இருக்க அதிக நேரம் எடு. இதன்மூலம் நாம் செழித்து வாழமுடியும். இறைவனோடு தனிமையில் அதிகநேரம் செலவிடு. இந்த மாதிரி நேரங்களினால் பலமும், மகிழ்ச்சியும் வந்து இறைவனின் சிநேகத்தை உறுதிப்படுத்துகிறது. ஜெபிக்கும் நேரங்கள் வளர்ச்சியின் நேரங்கள் ஜெபம் செய்வதிலேயே வாழப் பிரயாசப்படு. இறைவனிடம் பேசுவதினால் ஆத்தும இளைப்பாறுதலைக் கண்டடைவாய்.

மனிதன் ஜெபத்தினால் ஆத்தும சமாதானத்தையும், பலத்தையும் பெற்றுக் கொள்ளுகிறான். ஆகவேதான் நாம் விடாமல் தொடர்ந்து ஜெபிப்பதை ஒரு கடமையாக இயேசு தமது சீடர்களுக்கு எடுத்துரைத்தார். ஜெபம் செய்வதில் ஒருபோதும் சோர்ந்து போகாதே. ஜெபம் எல்லாவற்றையும் மாற்றுகிறது. ஜெபம் புத்துயிர் அளிக்கிறது. ஜெபம் தவிர்க்க முடியாதது. ஆகவே, இடைவிடாது வேத சொற்களுக்கேற்ப ஜெபி.

உன் நம்பிக்கை கற்பாறை போல், உறுதியாகிவிட்டபடியால், நீ ஜெபிப்பதை நிறுத்திவிடக் கூடிய அளவு ஜெபி. அதன் பின்னரும் ஜெபித்துக் கொண்டே இரு. நீ ஜெபிப்பது தவிர்க்க கூடாத ஒரு பழக்கமாகிவிட்டது. ஜெபம் துதித்தலாக மாறும் வரை ஜெபித்துக் கொண்டே இரு.

பரம இராசாவே எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். ஜெபத்தில் நீண்டநேரம் செலவிடு. ஜெபம் அநேக வகைப்படும். அது எந்தவகையாக இருந்தாலும், ஜெபம் ஆத்துமாவையும், மனதையும், இதயத்தையும் கடவுளோடு இணைக்கிறது. ஆத்துமா கடவுளோடு இணைக்கப்பட்டிருப்பதால் அவருயைட ஐக்கியத்தில் அவரிலும், அவர் மூலமாகவும், எல்லாவற்றையும் பெறறுக் கொள்ளுகிறது. விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. விசுவாசம் என்பது நமக்கு இயேசுவின் மேல் இருக்கும் மனப்பான்மை. அன்பு என்பது நமக்கு பிறர் மேல் இருக்கும் மனப்பான்மை. ஆனால், நம்பிக்கை என்பது இதைப் போலவே முக்கியமானது. அது நம் மேல் வெற்றியடைய நமக்கு இருக்கும் நம்பிக்கை.

எந்த ஜெபமும் பதில் கொடுக்கப்படாமல் போகாது என்பதை மறந்து விடாதே. ஜெபத்தோடு விதைத்து நம்பிக்யைாகவே தண்ணீர் ஊற்றி, மகிழ்ச்சியினாலே பூக்களையும் கனிகளையும் பெறுவாய். நாம் இறைவனிலும், இறைவன் நம்மிலும் வாழ்ந்து இருந்தால் நாம் அதிகமாக கனிகளை கொடுப்போம்.

அன்புள்ள தேவனுக்கு நம் ஜெபங்களை ஏந்தி அவரிடம் கொண்டு கோகும் தூதன் - இன்பமே. ஜெபம் என்பது தூபம் போல் எப்பொழுதும் உயர எழும்பிக் கொண்டே இருக்கும் ஒன்றாக இருக்கலாம் அல்லது இந்த உலகின் பனி போல் ஒருபோதும் எழும்பி பறக்காமல் தாழ்வாகத் தரையையே தழுவிக் கொண்டு இருக்கலாம். உண்மையான விசுவாச ஜெபம் எதுவென்றால், இன்பமான ஜெபம். நாம் முழு நம்பிக்கையோடு இறைவனை நெருங்கிப் போவோம். அதுவே மேலான பயபக்தி ஊட்டுகிற ஜெபமாக இருக்கிறது.

அன்புள்ள இயேசுவே எங்களைக் கேட்டருளும். எங்கள் விண்ணப்பங்கள் உம்மிடம் சேர்வதால் துயர இதயங்களிலிருந்து எழும்பும் சத்தமில்லாத அழுகைக் குரல் பரலோகத்தின் எல்லா நாதத்திற்கும் மேலாகக் கேட்கப்படுகிறது.

# ஜெபம்...

அநேகர் ஜெபத்தை மனு போடுதல் என்று எண்ணுகின்றனர். அது மனு போடுதல்தான். எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை வணக்கத்தோடு கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் இறைவனுக்கு தெரியப்படுத்துவது.

ஜெபம் என்பது நாளைக்கு உன்னைத் தேவைப்படுவோருக்காகவும், யார் யாரிடம் நீ அன்பு செலுத்துகிறாயோ அவர்களுக்காக நீ வேண்டுதல் செய்யவும், உன்னைத் தயார்ப்படுத்துவதே ஆகும்.

ஜெபத்தின் வல்லமையைப் பிரபலப்படுத்து. இறைவனின் சித்தத்தையை நாடும் உன் சித்தம் இணைக்கப்படும்போது அதனால் எழுகின்ற வாழ்க்கையில், வளமிக்கும் மேன்மையான, அமைதிலுள்ள சிநேகம் உண்டாவதால் ஆச்சரியமான அதிசயங்களைச் செய்யும் சக்தி கிடைக்கிறது.

யாரோடும் உனக்கு துன்பம் வரும் பொழுது அவன் இடத்தில் உன்னை வைத்து அவனுடைய துன்பம் அவனுக்குத் தீர்க்கப்படவேண்டுமென்று ஜெபம் செய். இப்படி செய்வதால் நாம் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண இயலும். நீ எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதைத் தெரிந்துக் கொள்ள உதவும்.

உன் வாழ்க்கையில் ஜெபிக்கவாவது, துதிக்கவாவது காரணம் காண்க. துதி அல்லது ஜெபி. அதன் மூலமாய் உன் இதயம் நித்தியத்திற்கு உயர்த்தப்படுகிறது. ஆம். அதன் மூலமாய் இறைவனின் பிரசன்னத்தினுள்ளே வந்துவிடுகிறாய். நம்மை இந்த உலகத்தோடும் உலகப் பொருள்களுடன் இணைக்கின்ற கயிறுகளை தளர்த்திவிடும் இயேசுவே ! இப்பொழுது கூட நம் ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், நாம் இறைவனோடு அதிகம் அதிகமாய் வாழும் பொழுதுதான் நாம் முழுவதுமாய் விடுதலையடையக் கூடும்.

இறைவனின் பிள்ளைகளாகிய நாம், “இறைவன் நம்மை ஆசீர்வதித்தால் ஒழிய நாம் உம்மை விடமாட்டோம்” என்று நாம் வற்புறுத்தி ஜெபிப்பது கர்வமல்ல. நாம் பெரிய காரியங்களை உரிமையோடு கேள் என்று இறைவன் நமக்குச் சொல்லவில்லையா? ஆகவே, நாம் அவ்வாறு செய்யும் பொழுது நாம் இறைவனுக்கு கீழ்ப்படுகிறோம் அல்லவா? நாம் ஜெபத்தில் போராடி வெற்றி பெறுவது சரியே ! உரிமையோடு கேட்பதும், உரிமையோடு எடுத்துக் கொள்ளவும் நேரங்கள் உண்டு.

ஒருபோதும் பக்தியுடன் துதிக்க மறவோம். இதுவே ஜெபங்களில் மாட்சிமையான ஜெபம். மற்றெல்லா ஜெபங்களும் அதில் அடங்கி வருகிறது. நாம் பக்தியோடும், அன்போடும் வணங்கும் பொழுது நாம் இயேசுவை நம்புகிறோம் என்றும் இயேசுவை நாம் நேசிக்கிறோம் என்றும் அர்த்தம். நம்பிக்கை இல்லாத எல்லா ஜெபங்களுக்கும் பதில் கிடைக்காமல் போகிறது. அன்பினால் நிரப்பப்பட்ட ஜெபமே வணங்குவதாலும், உன்னைக் காப்பாற்றும் பலமுள்ள கயிராகிய விசுவாசத்தையும் வல்லமையையும் நினைத்துப் பார். இறைவன் நமக்குச் சொல்லி இருக்கிறார். ஜெபமே நம்மைக் காப்பாற்றும் கயிறு.

உண்மையான மதம் ஆத்துமாவை இறைவனோடு இணைக்கிறது. கடவுளை அணுகுவதற்கு வேறு எந்த வழியும் விட, வேண்டுதல், ஜெபம் அதிக குறைவான வழியாக இருக்கிறது. தியானம் மனிதன் உபயோகிக்கும் கயிறு. அது அவனுடைய ஆத்துமாவைக் கடவுளோடு இணைக்கின்றது. ஐக்கியப்படுதல் கடவுள் எறிகின்ற கயிறு அது மனிதனின் ஆத்துமாவை இழுத்து அவரோடு சேர்க்கிறது.



நன்றி : GOD AT EVENTIDE

தொகுத்தவர் : **A.J.S. ராஜன்,** சென்னை




S
R
C


EXIT


EXIT


EXIT











## Kids Articles

# THE TRUE MEANING OF CHRISTMAS !

Every year, on the 25th of December, Christmas is celebrated all over the world. However, what is the real meaning of Christmas? Is it the gifts under the tree, the beautiful decorations, the Christmas cards, chocolates or the delicious dinners with family and friends? Is this Christmas?

Christmas is the day, we celebrate the birth of Jesus Christ. God sent his only begotten Son into this world for us to feel his abounding love and to save us from our sins. We should celebrate this joyous occasion with meaning, by preparing ourselves worthily to receive Child Jesus into our hearts. We should also share and spread the love of Christ with care, charity and forgiveness.

Therefore, as Christmas comes along, we should remind ourselves and younger children about the meaning behind this wondrous occasion. Christmas brings fun and happiness, however, we should acknowledge the real meaning of Christmas, which is about the coming of Jesus Christ, our saviour, who came to redeem us from the clutches of sin.

- Evelyn Moses

# Christ Our Lord...

Christ our Lord was born on this day
Hark the Herald Angels sang
Rejoicing with gladness and joy
Immaculate conception
Shepherds saw the star and came to see the king.
Three kings followed the star and came to see the king
with Gold, Frankincense and Myrrh
Many thought he was great, and I think he is
A time that could never be forgotten
Spirit of our king is still with us today

- Rachel Daniel

Merry Christmas

# Kids Articles



## FORGIVENESS

Forgiveness is a gift bestowed upon man
You must truly forgive in order to understand
The Lord our god works in miraculous ways
Look for the goodness in all whom you meet today
For the devils seek to destroy our souls
Wandering the world turning hearts cold
Our children, Gods children are his easiest prey
He decides them then leads them as tray
He comes into your homes when you least expect
Our children so full of lies and disrespect
God has been pushed aside
Our need for money and selfish pride
Stop and take time in your day
Resist temptations and

## FAITH

Love your enemy and befriend your foe
Open your heart and let the possibilities grow
Rid yourself of hateful and resentful ways
Fill yourself with only love today
Release the anger you've built up inside
Let go of the turmoil that burdens your mind
Slow your pace and embrace the ones you love
Have faith in he who watches from above
At that most important time
He will forgive the good of mankind
A messenger may be
These i thoughts i share
We are all gifts god gave to the earth
Each with our own reason we were birthed
Some have been lost on the path he had planned
It's time now to take them by the hand
Lead them to God and the cherished.

- KEVIN

# இரத்தமும் சதையுமாக மாறிய நற்கருணை . . .





பல பேர் சொல்வது போல் நற்கருணை வெறும் பகிர்வின் அடையாளம் மட்டும் அல்ல. அது இயேசுவின் திருவுடலும் கூட

நற்கருணை வடிவில் உயிருடன் எம்மோடு இருப்பவர் இயேசு...

மன்னார் பறப்பங்கண்டல் ஆலயத்தில் நற்கருணை இரத்தமும் சதையுமாக மாறியுள்ளது.

22-10-2015 வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மன்னார் பறப்பங்கண்டல் ஆலயத்தில் இருந்த நற்கருணை உயிருள்ள இரத்தமும் சதையுமாக தென்பட்டது. நற்கருணை மாற்றம் பெற்று இரத்தமும் சதையுமாக மாறி மனிதனின் இதயம் போலவும் அதற்கு அருகில் குழந்தையின் உருவம் போலவும், மேலும் அன்னை மரியாவின் உருவம் போலவும் காட்சியளிப்பதை காணக்கூடியதாக இருந்தது.

# நம் வாழ்க்கை ஆசீர்வாதமாக அமைய . . .

**புதிய ஆண்டில் இறை சித்தத்திற்கு ஏற்ப நமது வாழ்க்கையை அமைப்போம் . . .**

இந்த ஆண்டு முடிவடைந்து இன்னொரு ஆண்டு பிறக்க இருக்கிறது. 2015ஆம் ஆண்டில் நாங்கள் பலவிதமான தீர்மானங்களை எடுத்திருக்கலாம். எமது வாழ்க்கையிலே அத்தீர்மானங்கள் எடுக்கும் முன் சிறிது யோசித்திருக்கலாம். நான் இறைவனுக்கு உகந்த ஒரு பிள்யைாக வாழ்வேன் என்று அதாவது, இறைவனுடைய வார்த்தையை சிந்திக்க இறைவனுக்கு எமது வாழ்க்கையில் இடங்கொடுக்க இறைவன் களிக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்திருக்கலாம்.

இன்னும் சிலர் யோசித்திருக்கலாம். இப்பொழுது உடம்பு கொஞ்சம் கூடி இருக்கு. அதற்கு இந்த வருஷம் சாப்பிடுவதை குறைக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கலாம். வேதத்தை அதிகமாய் வாசிக்க வேண்டும். ஜெபிக்க வேண்டும். இன்னும் ஆண்டவருக்காய் ஊழியம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்திருக்கலாம். அதற்கு பிறகு இன்னும் சில தீர்மானங்கள் இருக்கலாம். கடந்த ஆண்டிலே எனக்கு மிகவும் கோபம் வந்தது. யாருடனும் அப்படி கோபப்படாமல் நான் மிகவும் அமைதியான மனுஷனாக இருக்க போகிறேன் என இன்னும் சில பேர் தீர்மானித்திருக்கலாம். இப்படி பல தீர்மானங்களை நாம் வித்தியாசமாக எடுப்பதுண்டு.

ஜனவரி மாதம் 1ம் தேதி இப்படிப் பல தீர்மானங்ளை நாம் எடுத்து இருப்போம். கொஞ்ச காலம் அதை நிறைவேற்றி இருக்கலாம். ஆனால், சில நாட்களுக்கு பிறகு அந்தத் தீர்மானங்களில் பாதி இல்லாமல் போயிருக்கும். பிறகு முக்கால் வாசி இல்லாமல் போயிருக்கும். கடைசியில் முழுமையாக இல்லாமல் போய்விடும். இது சாதாரணமான மனிதனின் வாழ்வில் இயல்பு. எப்படி பழைய வருடத்தில் இருந்தோமோ அதே இயல்புகளோடு புதிய வருடத்திற்குள் வந்து தீர்மானங்களை எடுக்கும் நாம் நம்மை இறைவனுக்குள் அர்ப்பணிப்பதில்லை. அதனால் தான் நாம் எடுக்கும் தீர்மானங்களை நம்மால் பின்பற்ற இயலாமல் போகின்றது. எனவேதான் எமது திருச்சபை, அர்ப்பணிப்பிற்கு எடுத்துக்காட்டமாக அன்னை மரியாளையும், சூசையப்பரையும் கூறுகிறது.

தேவ அழைத்தலுக்குப் போகின்ற நேரம் தேவமாதாவுக்கு 13 அல்லது 14 வயதுதான் இருந்திருக்கலாம். வானதூதர் அவருக்கு தோன்றி, "நீர் கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்" என்று உரைத்தார். மரியாவோ, "நான் கன்னியாயிற்றே இது எப்படி நடக்கும்" என்று கேட்டார். அதற்கு தூதர் "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்" எனக் கூறினார்.



மரியாள் பலவாறு சிந்தித்தார். ஆண்டவர் என் மனதில் குடியேறுகிறார். ஆகவே, ஆண்டவரின் ஆசீர்வாதத் திட்டத்தை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால், நீர் என்னை வழிநடத்தி எனனை செயல்படுத்த வேண்டும். எனக்கு வரும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் சக்தியை எனக்கு தரவேண்டும் என்று சொல்லி ஆண்டவரிடம் முழுமையாக சரணடைந்தார்.

ஆண்டவரிடம் சரணடைந்த நேரத்திலிருந்து ஆண்டவர் அவரை

வழிநடத்தி வருகின்றார் என வேதம் சொல்லுகிறது. ஒவ்வொரு சவால்களுக்குள்ளும் தேவமாதாவின் பெற்றோர் எதுவும் சொல்கிறார்கள் என்று சொல்லப்படுவதில்லை அல்லது யூத சமுதாயமும் அன்று இருந்த குருக்கள் என்ன சொல்கிறார்கள் என சொல்லப்படுவதில்லை. அந்த சந்தர்ப்பத்தில் மரியாள் சூசை என்றவருக்கு நிச்சயம் செய்யப்பட்டிருந்தாள். சூசை சட்டத்தின் முன் மரியாளை நிறுத்தியிருக்கலாம்.

இது என்னுடைய பிள்ளை இல்லை என்று திருமணத்தின் முன்பு இவள் கருத்தரித்திருக்கிறாள். ஆகவே, இவள் தண்டனைக்குள்ளாக வேண்டும் என தண்டனை வாங்கிக் கொடுக்க முடியும். ஆனால், யோசேப்பு நேர்மையாளரும், நீதிமானாகவும் வாழ்ந்து கனவில் ஆண்டவர் சொன்னபடி, செயல்பட்டு கடவுளின் தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்ற தன்னையும் தன் வாழ்க்கையையும் முழுமையாக அர்ப்பணித்தார்.

பெரிய நிறுவனங்களின் திட்டமிடல் போல நாமும் பல புது வருடத் திட்டமிடல்களை அமைத்திருப்போம். ஆனால், அனைத்துமே இறைவின் திட்டப்படி நடைபெற நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம். அந்த திட்டத்தை நிறைவேற்ற இறைவனுடன் நாம் ஒன்றிருந்தால்தான் அவைகளை நிறைவேற்ற முடியும். இறைவனுக்குள் நாங்கள் வாழ்ந்தால் மட்டுமே இவைகளை நிகழ்த்தலாம்.

ஆகவே, இறைவனிடம் ஒன்றித்திருப்பது மிக முக்கியம் செபிக்க வேண்டும். ஆண்டவரே, இந்த நாளில், இந்த வாரத்தில், இந்த மாதத்தில் என் வாழ்வில் நீர் திட்டமிட்டிருப்பதை செய்வதற்கு உமது வல்லமையையும் திறனாய்ந்து செயல்படும் தன்மையையும் எனக்குத் தந்தருளும் என்று கேட்போம்.

வாழ்வில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இல்லை என்று சொன்னால் நாம் என்ன செய்தாலும் அது நிறைவேறாது. ஆனால், நம் வாழ்வில் ஆண்டவர் இயேசுவை இணைத்து அதை அவர் சித்தப்படி, நடக்க மன்றாடினால் அவர் அதை செய்வார்.

**"ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ"- 2 கொரிந்தியர் 5:17**

ஆகவே, பிறக்கப் போகும் புது ஆண்டில் நாம் தவறவிட்ட காரியங்களையும், இழந்த காரியங்களையும் நினைத்து வருத்தப்பட்டு கொண்டிராமல், புது வருடத்தில் புது நம்பிக்கையோடு பிரவேசிப்போம். பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாம், கிறிஸ்து இயேசுவுக்குள் ஆண்டவர் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் என்ற பவுலின் வார்த்தைகளின்படி, இந்த வருடத்தின் கசப்பான, வருத்தமான, வேதனையான, துன்பமான, துக்கமான காரியங்களை நாம் மறந்து புது வருடத்தில் நமக்கு முன்பாக வரப்போகிற நன்மையான காரியங்களை எதிர்நோக்கி, முன்னானவைகளை நாடி, இலக்கை நோக்கித் தொடருவோம்.

ஆண்டவர் நம்மை எந்த வேளையிலும் கைவிடவே மாட்டார் என்பதை ஆணித்தரமாக நம் உள்ளத்தில் பதிய வைத்து, அவருடைய கரங்களை பிடித்தவர்களாக நாம் புது வருடத்தில் பிரவேசிப்போம். புது வருடம் நம் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதமான வருடமாக இருக்கும் என விசுவாசித்து அந்த நம்பிக்கையோடே நாம் புது வருடத்திற்குள் பிரவேசிக்க ஆண்டவர் இயேசுதாமே நமக்கு கிருபை செய்வாராக !

**"உங்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நத்தார் மற்றும் புது வருட வாழ்த்துக்கள் !**



பதிப்பாசிரியர்
**- கமிலஸ்**



# கிறிஸ்துமஸ்

## விண்ணகம் மண்ணகத்தை சந்திக்கும் அழகிய நிகழ்வு !

"மலர் மணத்தை சந்திப்பதுண்டு
வானம் நிலவைச் சந்திப்பதுண்டு
நிலம் நீரைச் சந்திப்பதுண்டு
கடல் கரையைச் சந்திப்பதுண்டு
மயில் மழையைச் சந்திப்பதுண்டு
குயில் சோலையைச் சந்திப்பதுண்டு"

இத்தகைய இயற்கையின் அழகிய சந்திப்புகளுக்கு மேலான ஓர் அற்புதமான சந்திப்புத் தான் கிறிஸ்துமஸ் பெருவிழா !

விண்ணகம், மண்ணகத்தைச் சந்திக்கின்ற, பாசம் பகையைச் சந்திக்க போகின்ற ஓர் அன்பின் அடையாளம். அதாவது விண்ணக மைந்தன், மனிதர்களாகிய நம்மை சந்திக்க, மண்ணகத்தில் அவதரித்த உன்னதமான நிகழ்வு கிறிஸ்துமஸ்.

மனித வாழ்விலே சந்திப்புகள் பலவிதம். சில சந்திப்புகள் சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. சில சந்திப்புகள் சங்கடத்தைக் கொடுக்கின்றன. ஆனால், கண்களால் காண இயலாத கடவுள் கண்களால் காணும் வகையில் மனிதனாக, இயேசுபாலனாக மண்ணில் பிறந்த வரலாற்று நிகழ்வு. எம் அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டும் அற்புத நிகழ்வு. கிறிஸ்தவர்களாகிய நாம் மிகவும் ஆவலுடன் கொண்டாடக் காத்திருக்கின்ற பரிசுத்த பண்டிகைதான் இந்த கிறிஸ்துமஸ் திருநாள்.

மனித சமூகத்தை பாவ அடிமைத்தளத்தில் இருந்து இரட்சித்து நம்மோடு குடியிருக்க இறைமகன் புவியில் பிறந்த தினம் இன்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் இயேசுவின் வருகையுடன் நிறைவடையவில்லை. இன்றும் பாலக இயேசு அன்றாடம் எம்மத்தியில் எம் மனங்களைப் புதுப்பிக்கும் ஒரு நிகழ்வாக இவ்வருட கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாட நம்மை ஆயத்தப்படுத்துவோம் !

இன்று மனிதநேயமிக்க இதயங்களிலே மனிதம் மதிக்கப்படுகின்ற இடமே இயேசு தங்குமிடம் என்ற உண்மையை உணர்ந்தவர்களாக, எமது சமூகத்தில் நாம் அன்றாடம் சந்திக்கின்ற ஏழை, எளியோர் அனாதைகள், நோயாளிகள், முதியோர், ஒடுக்கபட்டோர் ஆகியோரை ஆதரித்து, அவர்களுக்கு உதவி செய்து, அவர்கள் மத்தியில் இயேசுவைக் காண்போம். சுயநலத்தை தகர்த்து, பிறர் நலம் பேணுவோம்.

இன்று உலகெங்கும் மலிந்துக் கிடக்கின்ற கொலை, கொள்ளை, யுத்தம், பட்டினிச்சாவு, இடம்பெயர்வு, சர்வாதிகாரம், வன்முறைகள் போன்ற மனிதாபிமற்ற நிகழ்வுகளில் இருந்து இவ்வையகத்திற்கு விடுதலை இவ்வருட மீட்பர் இயேசுவின் வருகையில் கிடைத்திட ஒன்றிணைந்து பிரார்த்திப்போம். ஆடம்பரங்களைக் களைந்து அடுத்தவர் நல்வாழ்வுக்கு உதவிட நம்மை தயார்படுத்துவோம் !

ஆங்கிலேய கவிஞர் அலெக்ஸாண்டர் போப், கிறிஸ்து ஆயிரம் முறை பிறந்தாலும், நம்மிடம் பிறக்கவில்லையெனில், நமக்கு எப்பலனுமில்லை என்று கூறியுள்ளார். மகிழ்ச்சி, அன்பு, பகிர்ந்துக் கொள்ளுதலின் பெரு அடையாளமாகத் திகழும் கிறிஸ்து பிறப்பின் உன்னத கொடைகள் நமது வாழ்வில் பிரதிபலிக்க ஆசிப்போம். நாமும் நமது குடும்பங்களும் பாலக இயேசுவின் அருளால் நிரம்பிட பிரார்த்தித்து, உங்களனைவருக்கும் மகிழ்ச்சியான நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக !

- நினா டேறியஸ்

# RICH MAHAL

*The taste that lingers....*

## Restaurant & Asian Groceries



New Branch Detail

**Riks Mahal Restaurant**

Shop 2/2 - 8 Victor crescent,
Narre Warren, VIC 3805
(03) 97059366

**Rich Mahal Vermont South**

Shop 3, 499, Burwood Highway,
Vermont South Shopping Centre
Vermont South 3133
Victoria, Australia
Phone : 03 9887 7663



OPEN 7 DAYS 11.00 AM - 10.00 PM

**Hopper Night**
**Every Tuesday from 5 pm**



**Rich Mahal**
**Asian Groceries**

Rice Dhall Milk Flour Sugar Spices
DVDs Cds Phone Cards Newspapers

Shop 4, 501, Burwood Highway, Vermont South Shopping Centre
Phone : 9887 7663 Fax : 9802 6658

visit us @www.richmaha.com.au

# Corlam Kitchen

## The Real Taste Of Home Style Cooking



**OPEN 6 DAYS A WEEK**
11.00am to 10.00pm
(Tuesday - Sunday)

**Home Delivery Available**
Minimum order $ 35.00, Within 2 km radius only,
Others Delivery charges apply

**We cater for all occasions**

**BYO Restaurant** **Eat in & Take Away**

*Original Malaysian Indian Mamak Curry*
*South Indian / Singaporean*
*Nasi Kandar / Tandoori / Sri Lankan*

252, Blackburn Road, Glen Waverley

**Ph: 9802 4111**

www.corlamkitchen.com.au


With Best Compliments from
JAMES STREET
MEDICAL CENTRE
BULK BILING
Mr. Stephen Sellathurai CPA.,
Dr. Anne Sellathurai M.B.B.S., F.R.A.C.G.P.
11/63 James Street Dandenong VIC 3175 Ph : 03 9793 1962 / Fax : 03 9793 1924
jsmc_anne@hotmail.com


Ranjana
Fashion
Fascinating Shopping
for you and your
dear ones
258 Blackburn Road,
Glen Waverley,
3150 Victoria, Australia
M : 0403 114 783 / 0433 334 489
P : 03 9803 3503 | E : leopillaij@hotmail.com


Nirmala Alphonse
President
Tyrone Gnanapragasam
Vice President
Shanthi Antony
Secretary
Ratheeshkanthan
Asst. Secretary
Jeena Godwin
Youth Co Ordinator
Lucas Savairyar
Religious Secretary - South
William Rajendram
Religious Secretary - North
J. Thayanujan
Welfare Secretary - South
Rev.Fr.Anthony Gnanapragasam
Chaplain
Prabhu Daniel
Committee Member
Sesuraj Michaelraj
Committee Member
Larissa
Committee Member
Reynald Alfred
Treasurer
Priyaan
Asst. Treasurer
Kamilas Soosaipillai
Editor
Hudson Selvarajah
Auditor

# மனிதா ஒரு நிமிடம் . . .

மனிதா !

சக்தியாகவும், சத்தியமுமாகவும் வாழும் நம் தெய்வம்
“உன்னைத் தேடி உறவாட”
உனக்காக மண்ணில் பிறக்க உள்ளார்.
குடிலில் பிறக்க இருக்கும் மழலை செல்வத்திற்கு
ஆயிரமாயிரம் நாமங்களும் வாழ்த்துக்களும்
நீ வாரி வழங்கலாம்...
ஆனால் அவர் விரும்பும் பரிசுதான் என்ன?
நீயும், உன் வாழ்வும் தானே !
தோழா !
கணக்கற்ற இதிகாசங்களையும் இறைவேண்டல்களையும்
குழந்தை பாலனுக்கு நீ வாழ்த்தி வணங்கலாம்...
ஆனால் அவர் விரும்பும் வேண்டல் என்ன?
நண்பா,
உன் சுத்தமான சிந்தனை - சொல் - செயல் தானே !
ஆம் தோழா ! நீ தான் அவர் விரும்பும் மிக உயர்ந்த பிறந்தநாள் பரிசு !
உன் உள்ளம் தான் அவர் பிறக்க நேசிக்கும் குடில்...
நண்பா !
பாவங்களால் விரட்டி அடித்த இறைவனை மீண்டும்
மண்ணில ஈன்றெடுக்க நீ வேண்டும் !
ஏனென்றால், நீயே அவர் குடியிருக்கும் கோவில்...
இறை நெஞ்சமே ! உன் மாண்பினை அறிந்திடு !
மதிப்புடன் வள்ர்ந்திடு !
நாகரீக தொட்டில்களில் உறங்கிட மறுத்திடு !
அடுத்தவருக்கும் நலன்கள் நல்கிட
இறைமகன் உலகில் பிறந்திட
உன்னையே அவரது மலர் மஞ்சமாக்கிடு !
மழலை மன்னவனே !
உனக்கு நாங்கள் மணிமுடியாகிட
எம்மையே உம் பதம்
அர்ப்பணிக்கின்றோம்.

## "New year Mass in Tamil (Midnight Service)

- December 31, 2015 at 11.15 pm
- Service commence with Rosary, Thanks Giving and Adoration
- தமிழில் திருப்பலி 12.00 மணிக்கு
- St.Pascal Seminary Church, 100 Albian Road, Box Hill
- Followed by New Year Fellowship

If possible Please “bring a plate (Pongal/Milk Rice, Short Eats, Xmas Cake etc.) ” to share.

*TCAV* யின் சார்பாக அனைவருக்கும் **புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் !**